# சத்தியமங்கலம் நகராட்சி

# நிர்வாக அறிக்கை

# 2019 - 2020

# சத்தியமங்கலம் நகராட்சி
# 2019-2020-ஆம் ஆண்டு நிர்வாக அறிக்கை

## அமைப்பும், நிர்வாகமும் :

சத்தியமங்கலம் 17.01.1970ஆம் தேதி முதல் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசு ஆணை எண்.58 நாள் 12.01.1970-ன் படி மூன்றாம் நிலை நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டது. அரசு ஆணை எண். 642, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை நாள் 15.04.1977-ன் படி 01.04.1977 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டது. 22.5.1998-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசாணை எண். (நிலை) 85-ன்படி முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது.

## நகராட்சி எல்லை :

இந்நகராட்சியில் சத்தியமங்கலம் வரதம்பாளையம், கோட்டுவீராம்பாளையம் ரங்கசமுத்திரம் ஆகிய வருவாய் கிராமங்கள் அடங்கியுள்ளன. நடப்பு ஆண்டில் இந்த எல்லையில் மாறுதல் ஏதும் இல்லை. இதன் பரப்பளவு 29.24 சதுர கிலோ மீட்டர் ஆகும்.

## மக்கள் தொகை :

2011-ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 37816 இதில் ஆண்கள் 18848, பெண்கள் 18968, மற்றவர்கள்-2.

## நிர்வாக அலுவலர்கள்:

| | | |
|---|---|---|
| திரு ஆ. தாணுமூர்த்தி, ஆணையாளர் | 1.4.2019 முதல் | 10.10.2019 முடிய ஆணையாளராக பணிபுரிந்து வருகிறார் |
| திருமதி. இரா.அமுதா ஆணையாளர் | 10.10.2019 முதல் | 31.3.2019 முடிய ஆணையாளராக பணிபுரிந்து வருகிறார் |

## தேர்தல் :

இந்நகர் மன்றம் 27 வார்டுகளாக பிரிக்கப்பட்டதற்கு அரசு ஆணை எண். 135, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள் 11.6.1996ல் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

1.4.2019 முதல் தற்போது வரை தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நகர மன்றக்கூட்டம் நடத்தப்படுகிறது.

2016ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தல் உயர்நீதி மன்றத் தீர்ப்பின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை ஆண்டில் இடைத்தேர்தல் ஒன்றும் நடைபெறவில்லை.

G.O.Ms.No.145 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(தேர்தல்) நாள் 24.10.2016 உடன் நகர்மன்றத் தலைவரின் பதவிக் காலம் முடிவடைந்து 25.10.2016ஆம் தேதி முதல் 31.8.2020 வரை ஆணையாளர் அவர்கள் தனி அலுவலராக பொறுப்பேற்று உள்ளார்.

## நகர் மன்ற நடவடிக்கைகள் :

1. மாதந்தோறும் சாதாரணக் கூட்டங்களும், மேலும் அவசர அவசியம் ஏற்படும் பொழுதெல்லாம் அவசரக் கூட்டம் மற்றும் சிறப்புக் கூட்டம் நடைபெற்றன.

2. நடப்பு ஆண்டில் 18 கூட்டங்கள் நடத்தப்பட்டன. அவற்றில் 1 சிறப்பு கூட்டம், 11 சாதாரணக் கூட்டங்களும், 6 அவசரக் கூட்டங்களும் நடைபெற்றது. நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்ட பொருள்கள் முடிவு செய்யப்பட்டன.

| வ. எண் | கூட்டத்தின் விபரம் | நடத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருள்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | சாதாரணம் | 11 | 298 |
| 2 | அவசரம் | 6 | 21 |
| 3 | சிறப்பு | 1 | 1 |
| | மொத்தம் | 18 | 320 |

## குழுக்கள் :

கீழ்க்குறிப்பிட்ட குழுக்கள் நடப்பு ஆண்டில் இருந்தன. அந்த குழுக்களின் பெயர்களும் நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கையும் முடிவு செய்யப்பட்ட விஷயங்களும் எண்ணிக்கையும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

## 2019-2020 ஆம் ஆண்டு :

| வ. எண் | குழுவின் பெயர் | 2019-2020ஆம் ஆண்டு நடைபெற்ற கூட்டங்கள். | முடிவு செய்யப்பட்ட பொருட்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | நியமனக்குழு | -- | -- |
| 2 | ஒப்பந்தக்குழு | -- | -- |
| 3 | வரி மேல்முறையீட்டுக் குழு | -- | -- |
| 4 | உள்ளூர் திட்டக்குழு | -- | -- |

## நிர்வாகம் :

இந்நகராட்சியில் நிர்வாகம் ஐந்து பிரிவுகளாக ஆணையர் அவர்களின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது.

1. பொது நிர்வாகம்
2. குடிநீர் விநியோகம் (பொறியியல் பிரிவு)
3. வருவாய் பிரிவு
4. நகரமைப்பு பிரிவு
5. பொதுசுகாதாரப் பிரிவு

## பொது நிர்வாகம்

இந்நிர்வாகத்தின்கீழ் கீழ்காணும் பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

| | | |
|---|---|---|
| 1. மேலாளர் | : | 1 |
| 2. உதவியாளர் | : | 2 |
| 3. இளநிலை உதவியாளர் | : | 5 |
| 4. அலுவலக உதவியாளர் | : | 2 |
| 5. இரவுக் காவலர் | : | -- |
| 6. பதிவறை எழுத்தர் | : | 1 |
| 7. தட்டச்சர் | : | 1 |

இதில் வருடம் ஒன்றிற்கு ஊதியச் செலவு ரூ.36,31,862/- ஆகும்.

## கணிணி பிரிவு

கணிணி பிரிவில் உதவி கணிணி அமைப்பாளரைக் கொண்டு இந்நகராட்சியில் 19 கணிணிகள் இயங்கி வருகிறது. இதன் பராமரிப்பு பணியுடன் சேர்த்து நகராட்சியில் வரியினம் மற்றும் வரியில்லா இனங்கள் கணிணியில் பதிவு செய்யப்பட்டு வரி வசூல் செய்யப்படுகிறது. நகராட்சி அனைத்து பணிகளும் கணிணியில் பதிவேற்றம் செய்து நடவடிக்கை மேற்கொள்ள முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. நகராட்சிக்கென்று உள்ள இணையத் தளத்தில் நகராட்சி விபரங்கள், நகர்மன்றக் கூட்ட நடவடிக்கைகள், ஆண்டு கணக்குகள், வரவு செலவு கணக்குகள் போன்றவைஅவ்வப்போது பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது.

## பொறியியல் பிரிவு

குடிநீர் விநியோக இளம் பொறியாளர் கிரேடு-2 பணியிடத்தினை இந்நகராட்சியில் பொறியாளர் நிலை-3 5.11.1998 முதல் பணி உயர்த்தப்பட்டுள்ளது. நகராட்சி பொறியாளரே பொது மராமத்து மற்றும் குடிநீர் பிரிவு ஆகிய இரண்டு பணிகளையும் கவனித்து வருகிறார். மேலும் கீழ்காணும் பணியாளர் பொறியியல் பிரிவில் பணியாற்றி வருகிறார்.

| | | |
|---|---|---|
| 1. பொறியாளர் | : | 1 |
| 2. பொதுப் பணி மேற்பார்வையாளர் | : | 1 |
| 3. மின் பணியாளர் நிலை-2 | : | 1 |
| 4. குழாய் பொருத்துநர் | : | 1 |
| 5. தலைமையிடத்து உதவியாளர் | : | 2 |
| 6. குழாய் திறப்பாளர் | : | 4 |
| 7. ஓட்டுநர் | : | 1 |
| 8. இரவுக் காவலர் | : | 1 |

மேற்படி பொறியியல் பிரிவு மற்றும் குடிநீர் பிரிவில் பணிகளை கவனித்து வருகின்றனர். இவர்களின் வருட ஊதிய செலவினம் ரூ.66,82,286/-

## தெருவிளக்கு பராமரிப்பு:

இந்நகராட்சியில் தெருவிளக்கு பிரிவில் கீழ்காணும் பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

| | | |
|---|---|---|
| மின்கம்பியாளர் | : | 1 |
| மின்கம்பி உதவியாளர் | : | 1 |

இவர்களின் வருட ஊதிய செலவினம் ரூ.17,32,032/- ஆகும்

## சாலைகள் :

அ) இந்நகர எல்லைக்குள் யாதொரு நெடுஞ்சாலையும் நகர் மன்ற பராமரிப்பில் இல்லை. இந்நகராட்சியில் பராமரிக்கப்படும் சாலைகளின் நீளம் 67.633 கி.மீ ஆகும். இதன் விபரம் :-

| | | |
|---|---|---|
| 1 | தார் ரோடு | 52.270 கி.மீ |
| 2 | ஜல்லி தளம் | -- |
| 3 | சிமெண்ட் ரோடு | 11.781 கி.மீ |
| 4 | மண் ரோடு | 3.582 கி. மீ |
| | மொத்தம் | 67.633 கி. மீ |

ஆ)சாலைகளின் பேரில் உள்ள ஆட்சேபகரமற்ற நடப்பு படிகளை கட்டணம் வசூலித்து அனுமதிக்கப்படுகிறது.

இ) நடப்பு ஆண்டில் வண்டி, வாகனாதிகளின் வகையில் வரவு ஏதும் இல்லை. பாதை பராமாரிப்புக்கென அனுமதிக்கப்பட்ட சகாய உதவித் தொகை இன்னும் பெறப்பட வில்லை.

## விளக்குகள் :

இந்நகராட்சி எல்லைக்குள் 1555 விளக்குகள் இருக்கின்றன.

| | | |
|---|---|---|
| 1 | 15 LED விளக்குகள் | 1361 |
| 2 | 130 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் | 104 |
| 3 | 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் | 90 |
| | மொத்தம் | 1555 |

இன்னும் புதியதாக தெரு விளக்குகள் போடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

சாலையில் கிலோ மீட்டருக்கு 20 விளக்குகள் உள்ளன. தெருவிளக்குகள் பராமரிப்பு பணி மின் வாரியத்திடமிருந்து 15.9.89 முதல் அரசின் ஆணைப்படி நகராட்சிக்கு ஒப்படை செய்யப்பட்டது. 1.4.2014 முதல் தெருவிளக்கு பராமரிப்பு தனியார் மயமாக்கப்பட்டு Schnell Energy,Coimbatore அவர்களிடம் ஒப்படை செய்யப்பட்டு தெருவிளக்குகள் புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு பணி செய்யப்பட்டு வருகிறது.

நடப்பு ஆண்டில் தெரு விளக்குகள் பராமரிப்புக்காக மின்வாரியம் விதிக்கும் கட்டண விதிகளின்படி ரூ.21,10,717/- கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது. மேலும் தலைமை குடிநீரேற்று நிலைய உயர் மின்அழுத்த இணைப்பு எண். 9 மற்றும் 55-க்கு நடப்பு ஆண்டில் ரூ.64,93,783/- மின்கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் தெருவிளக்கு பராமரிப்பு தனியார் மயம் மூலம் மேற்கொண்டமைக்காக ரூ.9,40,368/- செலவிடப்பட்டுள்ளது.

## திட்டப் பணிகள் 2019-20

2019-20-ஆம்ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகள்:

| வ. எண். | திட்டத்தின் பெயர் | பணிகளின் விபரம் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | TURIP 2019-20 | சிப்ப சாலை பணிகள் | ரூ.500.00 லட்சம் |
| 2 | MLACD 2019- 20 | OHT Tank at Kullan karadu | ரூ.10.00 லட்சம் |
| 3 | 14th Central Finance Commision 2019-20 | 5 சிப்ப சாலை பணிகள் | ரூ.152.70 லட்சம் |
| 4 | SBM 2018-19 | 10th SHPC RRC கட்டுதல் | ரூ.18.00 லட்சம் |
| | | **மொத்தம்** | **ரூ.680.70 லட்சம்** |

## குடிநீர் விநியோகம் :

இந்நகருக்கு 16.76 லட்சம் செலவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் 1967ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இதற்கு தேவையான தண்ணீர் நகரின் மத்தியில் செல்லும் பவானி நதியில் இருந்து எடுக்கப்படுகிறது. குடிநீர் திட்டத்தில் இரண்டு மேல்நிலைத் தொட்டிகள் உள்ளன. ஒன்றின் கொள்ளளவு 1,00,000 கேலன், மற்றொன்றின் கொள்ளளவு 60,000 கேலன்கள் ஆகும். தினசரி நகர மக்களுக்கு 3.63 லட்சம் கேலன் தண்ணீர் சுத்திகரிக்கப்பட்டு முறையே விநியோகிக்கப்படுகிறது. 64 பொதுக் குழாய்களும் 6367 குடிநீர் இணைப்புகள் மீட்டர் கட்டணம் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. 01.07.2013-ம் தேதி முதல் வீட்டு உபயோகத்திற்கு 1000 லிட்டருக்கு ரூ.10.00-ம் தினசரி 10500 லிட்டர்கள் இலவசமாக வழங்குவதுடன் குறைந்தபட்சம் கட்டணமாக மாதம் ரூ.110.00 வசூலிக்கப்படுகிறது. குடும்ப காரியம் அல்லாதவைகளுக்கு 1000 லிட்டருக்கு ரூ.25 வீதமும் மாதாந்திர குறைந்த கட்டணமாக ரூ.310 வசூலிக்கப்படுகிறது. தொழிற்சாலைகளுக்கு 1000 லிட்டருக்கு ரூ.30 வீதமும் மாதாந்திர குறைந்தபட்ச கட்டணமாக ரூ.310/- வீதமும் வசூலிக்கப்படுகிறது. 2019-20-ம் ஆண்டு மொத்த குடிநீர் கட்டண வருமானம் ரூ.89,00,000/- இந்நகராட்சியில் இரண்டாவது குடிநீர்த் திட்டம் ரூ.40 லட்சம் மதிப்பீட்டில்பணி முடிக்கப்பட்டது.

## பாதாள சாக்கடைத் திட்டம் :

இந்நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் ரூ.54.26 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, 13.4.2016-ல் 7-வது முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு 16.9.2016 அன்று பணிகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் வேலை உத்திரவு வழங்கப்பட்டது. 35.894 கி.மீ தூரத்திற்கு கழிவுநீர் குழாய் பதிக்கப்பட்டு Manholes 1668, வீட்டு குடிநீர் இணைப்புகள்-5925, 4.08 MLD கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் தொடர்பான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. 65% பணிகள் முடிந்த வகைகளிலும் 72% திட்ட மானியம் செலவிடப்படுகிறது.

## வருவாய் பிரிவு

1. வருவாய் ஆய்வாளர் : 1

2.வருவாய் உதவியாளர் : 5

மேற்படி பிரிவினர் இந்நகராட்சியில் வரியினம் மற்றும் வரியில்லா இனம் வசூலித்து வருகின்றனர். பணியாளர்களுக்கான ஊதியச் செலவினம் ரூ.31,98,156/- ஆகும்.

## தொழில் நிறுவனங்கள்:

தொழில் நிறுவனங்களில் துப்புரவு அலுவலர் மற்றும் துப்புரவு ஆய்வாளர்களால் ஆய்வு செய்யப்படுகிறது. மேற்படி தொழில்களுக்கு சட்டப்படி உரிமங்களும் வழங்கப்படுகிறது.

நகராட்சி தினசரி சந்தை, வாரச்சந்தை இதர குத்தகை வரவு விபரங்கள்.

| வ. எண். | குத்தகை இனங்கள் | 2017-18 ஆண்டு வருமானம். | 2018-19 ஆண்டு வருமானம். | 2019-20 ஆண்டு வருமானம் |
|---|---|---|---|---|
| 1 | தினசரி மார்கெட் | 2179365 | 2234401 | 2031500 |
| 2 | வாரச்சந்தை | 400000 | 420000 | 441000 |
| 3 | ஆடுவதை சாலை | 2186672 | 2134659 | 2313210 |
| 4 | இறைச்சிக்கடைகள் | | | |
| 5 | பேருந்து நிலையக் கடைகள் | 12467593 | 15557254 | 19495092 |
| 6 | இதரநகராட்சி கடைகள் | | | |
| 7 | பேருந்து நிலையம் கடடணம்&கழிப்பிடம் | 733854 | 1465907 | 1577237 |
| 8 | மரங்கள் பலவகை அனுபவித்தல் | -- | -- | -- |
| 9 | ஓடத்துறை | -- | -- | --- |
| 10 | சைக்கிள் ஸ்டேண்டு | 140570 | 172000 | 189630 |

தினசரி சந்தை ஒன்றும்,வாரச்சந்தை ஒன்றும் உள்ளது. தற்போது நெரிசல் மிக்க தினசரி சந்தை ரோட்டில் உள்ள தினசரி சந்தையை வசதி மிக்க இடத்திற்கு மாற்றி அமைப்பதற்காக சர்வே எண்.341/14-ல் 0.16.0 ஹெக்டேர் நிலம் நகராட்சிக்கு பராதீனம் செய்யக் கோரி வருவாய்த்துறையினரிடம் கோரப்பட்டுள்ளது. இன்னும் இந்நிலம் ஒப்படைக்கப்படவில்லை. மேலும் வாரச்சந்தையின் ஒரு பகுதியில் தினசரி சந்தை கட்டப்பட்டு 1.4.1999 முதல் இயங்கி வருகிறது.

1.10.1970 லிருந்து சொத்து வரியாக ஆண்டுக்கு கீழ்க்கண்டவாறு கட்டிடங்கள் வருட வாடகையின் மதிப்பில் 21% விதிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | பொதுக் காரியங்களுக்கு வரி | 2.00 |
| 2 | தண்ணீர் வரி | 6.50 |
| 3 | சாக்கடை வரி | 1.00 |
| 4 | கழிப்பிட வரி | 2.50 |
| 5 | விளக்கு வரி | 4.00 |
| 6 | கல்வி வரி | 5.00 |
| | மொத்தம் | 21.00 |

## வண்டிகள் பிராணிகள் மீது வரி :

தமிழ்நாடு சட்டம் நகராட்சிகள் சட்டம் 1920 அட்டவணை-4ல் விதி 20(1)ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி அதிகபட்ச வரி விதிக்கப்படுகிறது.

சொத்துவரியுடன் நூலக வரியாக நடப்பு ஆண்டில் ரூ.22,76,721/- வசூலிக்கப்பட்டது.

## வரி விதிப்பு சொத்துவரி :

நடப்பு ஆண்டில் வீடுகள் மற்றும் காலியிடங்கள் எண்ணிக்கை 13665 என்று கணக்கிடப்பட்டது. சென்ற ஆண்டு இது 13177 ஆக இருந்தது. வருட முடிவில் வரிவிதிக்கப்பட்ட வீடுகள் மற்றும் காலியிடங்கள் மொத்த எண்ணிக்கை 13665 ஆகும்.

## கேட்பு வசூல் மற்றும் நிலுவை :

அறிக்கை ஆண்டில் மொத்த கேட்புத் தொகை ரூ.2,46,41,000/- ஆகும். இதில் ரூ.2,16,82,000/- வசூலிக்கப்பட்டுள்ளது. இதில் அரசு கட்டடங்களுக்கான கேட்பில் ரூ.25,84,000/-நிலுவையில் உள்ளது. மேலும் அரசு கட்டிட நிலுவைக்கு உயர் அதிகாரிகளுக்கு கடிதம் எழுதப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வரியில்லாத இனங்களில் ( நடப்பு) கேட்புகள் 100 % வசூலிக்கப்பட்டுள்ளது.

## தொழில் வரி திருத்தம் :

தமிழ்நாடு அரசு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை உத்திரவு எண். 11 நாள் 12.1.1999ல் 1992-ஆம் ஆண்டில் தொழில் வரி விதித்தல் மற்றும் வசூல் கட்டணத்தை திருத்தம் செய்து புதிய தொழில் வரி விதிப்பது மற்றும் வசூல் செய்வது தொடர்பாக 1920ஆம் வருடத்திய தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் பிரிவுகளை ஏற்படுத்தி புதியதாக தொழில் வரி விதிகள் 1999 என வெளியிட்டு தமிழ்நாடு அரசிதழ் பிரத்யேகம் எண். 753, நாள் 28.8.98ல் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. எனவும் இந்த புதிய தொழில் வரி விகிதம் 1.10.1998 முதல் அமுலுக்கு வரப்பட்டு 2019-2020-ம் ஆண்டிற்கு அரசு மற்றும் வணிக நிறுவனங்களின் வசூல் ரூ.36,34,000/- வசூலிக்கப்பட்டுள்ளது.

## நகரமைப்பு :

இப்பிரிவில் கீழ்காணும் பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

1. நகரமைப்பு ஆய்வர் : 1
2. சங்கிலியாளர் : 1

இவர்களின் ஆண்டு ஒன்றுக்கான ஊதிய செலவினம் ரூ.9,21,420/- ஆகும்.

2018-2019-ம் ஆண்டில் கீழ்க்காணும் விபரப்படி கட்டடம் கட்ட அனுமதி மனுக்கள் வரப்பட்டு முடிவெடுக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1 | 1.4.2019-ம் தேதியில் நிலுவை | இல்லை |
| 2 | நடப்பு ஆண்டில் வரப்பெற்றவை | 130 |
| 3 | உரிமம் வழங்கப்பட்டவை | 127 |
| 4 | உரிமை மறுக்கப்பட்டது | -- |
| 5 | உரிமம் திருப்பப்பட்டது | 3 |
| 6 | நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(சேலம்) | -- |
| 7 | 31.3.2019-ம் தேதியில் நிலுவை | -- |

## நகரளவை பிரிவு

இந்நகராட்சியில் ஒரு நகர சார் ஆய்வாளரும் (நில அளவை) இரண்டு புல உதவியாளர்கள் பணியிடங்கள் காலியாக உள்ளது.

நில அளவை சம்பந்தமாக பொதுமக்களிடமிருந்து வருவாய் வட்டாட்சியர் மூலமாகவும் நகராட்சி ஆணையாளர் மூலமாகவும் வரும் மனுக்களின் மீது நடவடிக்கை எடுக்கும் பணியும் தெரு அளவையின்படி உள்ள கற்கள் தணிக்கைப் பணியும், தார் குறிகள் புதுப்பித்தல் பணியும், மற்றும் ஆக்கிரமிப்பு அகற்றும் பணியும் இவர்களது பணிகளாகும். இவர்களின் ஆண்டு ஒன்றுக்கான ஊதிய செலவினம் ஏதும் இல்லை.

## பொதுசுகாதாரம்

இந்நகராட்சியில் பொதுசுகாதாரப் பிரிவில் கீழ்காணும் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றார்கள்.

| | | |
|---|---|---|
| 1. துப்புரவு அலுவலர் | : | 1 |
| 2. துப்புரவு ஆய்வாளர் | : | 3 |
| 3. துப்புரவு மேற்பார்வையாளர்கள் | : | 5 |
| 4. லாரி ஓட்டுநர் | : | 2 |
| 5. துப்புரவு பணியாளர் | : | 84 |
| 6. மகப்பேறு உதவியாளர் | : | 1 |

இவர்களின் ஆண்டு ஊதிய செலவினம் ரூ. 4,01,13,624/-

## துப்புரவு:-

தெருக்களில் அகற்றப்படும் குப்பையை நகராட்சி லாரிகளின் மூலமாக நகராட்சி குப்பைக் கிடங்கிற்கு கொண்டு செல்லப்படுகிறது. இந்நகராட்சியில் 18 ஆண், பெண் இருபாலர் நீரடி பொதுக் கழிப்பிடம் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நகரில் உள்ள அனைத்து உலர் கழிப்பிடங்களும், நவீன கழிப்பிடங்களாக மாற்றப்பட்டு விட்டதால் மனிதக் கழிவை அகற்றும் பணியிலிருந்து துப்புரவுப் பணியாளர்கள் விடுவிக்கப்பட்டு சாக்கடை சுத்திகரிப்பு, தெரு கூட்டுதல் ஆகிய பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். நகரில் வீடுகளில் எண்ணிக்கை 11720 என கணக்கிடப்பட்டுள்ளது. நகருக்கு வெளியே 2 கி.மீ. தூரத்தில் உள்ள 6.75 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலத்தில் திடக்கழிவுகள் கொண்டு சேர்க்கப்படுகிறது.

இந்நகராட்சியில் 84 துப்புரவுபணியாளர்கள் மற்றும் 5 மேற்பார்வையாளர் பணியாற்றி வருகின்றனர். இவர்களுக்கு ஆண்டிற்கு 2 செட் சீருடைகளும் 1 செட் காலணிகளும் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. இவர்களுக்கு தற்போது அரசினால் அறிவிக்கப்படும் அனைத்து சலுகைகளும் அமுல்படுத்தப்படுகிறது. அறிக்கையாண்டில் இத்திட்டத்தின் கீழ் துப்புரவு பணியாளர்களுக்கு ரூ.2,45,552/- செலவு செய்யப்பட்டுள்ளது.

## வாகனங்கள்:

இந்நகராட்சிக்கு திடக்கழிவுகள் அகற்றும் பணிக்கு கீழ்காணும் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1. டம்பர் பிளேசர் | : | 3 |
| 2. பிரண்ட் அண்ட் லோடர் | : | 1 |
| 3. லாரி | : | 1 |
| 4. மினி லாரி | : | 4 |

## உணவுக் கலப்படம் :

இச்சட்டம் தற்பொழுது உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம் 2006 என திருத்தி அமைக்கப்பட்டு இதற்கென உணவு பாதுகாப்பு அலுவலர் என துறை மாற்றி அமைக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நியமன அலுவலர் நியமிக்கப்பட்டு அவரது கட்டுப்பாட்டில் உள்ளனர். தற்பொழுது இபபணி நகராட்சியால் மேற்கொள்ளப்படுவதில்லை.

## இ. அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான தொழில்கள்:-

இத்தொழில்கள் நடத்த உரிமையானை கோரி வரும் விண்ணப்பத்தின்பேரில் ஆணையாளர் அவர்களும் துப்புரவு ஆய்வரும் பார்வையிட்டு அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் கொடுக்கப்பட்ட லைசென்ஸ்களின் எண்ணிக்கையும் வசூலிக்கப்பட்ட கட்டணத் தொகையும் கீழே தரப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 2017-2018 | 332 | ரூ.4,70,100 |
| 2018-2019 | 321 | ரூ.6,47,910 |
| 2019-2020 | 412 | ரூ. 6,83,095 |

## பிறப்பு இறப்பு பதிவு:-

நகராட்சி பகுதி மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு தேர்ச்சி பெற்ற பிறப்பு இறப்பு பதிவாளர்களால் பிறப்பு, இறப்பு பதிவு செய்யப்படுகிறது. அறிக்கை ஆண்டில் 979 பிறப்பும், 276 இறப்பும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இறப்பு விகிதம்

| | |
|---|---|
| வாந்தி சீதபேதி | நகரில் இறந்தோர் இல்லை |
| சுவாச நோய்கள். | -- |
| மற்ற நோய்கள். | |
| காலரா. | நகரில் இறந்தோர் இல்லை |
| பிளேக். | ” |
| பெரியம்மை. | ” |
| தொழுநோய் | ” |
| இதர சுவாச நோய்கள் | ” |

## தடுப்பு மருந்து:-

கொசு ஒழிப்புத் திட்டத்தின் கீழ் ஆறு களத் தொழிலாளர்களும் 47 DBC பணியாளர்கள் (ஒப்பந்தம்) பணிபுரிந்து வருகின்றனர். 2019-2020-ம் ஆண்டில் இப்பணியாளர்களின் ஊதியம் இத்திட்டத்திற்காக செலவழிக்கப்பட்ட தொகை ரூ.39,45,680/-

## டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டம்:-

2019-20ஆம் ஆண்டிற்கு மகப்பேறு உதவித் திட்ட தொகை ஏதும் பெறப்படவில்லை.

## நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் - 2019-2020

மருத்துவ அலுவலர்-1, மருந்தாளுநர்-1, லேப் டெக்னீசியன்-1, நகர்ப்புற சுகாதார செவிலியர்-3, தற்காலிக பணியாளர்-4.

செயல்படத் துவங்கிய நாள் 9.4.2012

| | |
|---|---|
| புறநோயாளிகள் | : 54000 ( ஒரு வருடம்) |
| உள்நோயாளிகள் | : 1086 |
| சுகப்பிரசவங்கள் (ஆண்டிற்கு) | : -- |
| கர்ப்பிணிப் பெண்கள் | : 368 |
| குழந்தைகளுக்கு தடுப்பூசி | : 328 குழந்தைகள். |
| JSY கர்ப்பிணிகளுக்கு கடந்த ஆண்டு செலவினம். | : -- |
| குடும்ப நல அறுவை சிகிச்சை பரிந்துரை | : 190 |
| பள்ளி சிறார் முகாம் (Scfhool Health) | : 20 |

சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் அரசு பொது மருத்துவமனை இல்லாமையால் நகராட்சி எல்லைக்கு வெளியில் உள்ளதால் நகர் நல மையத்தின்மூலம் தினமும் அதிக புறநோயாளிகள் 180-க்கு மேல் வந்து செல்கின்றனர். பொதுமக்களுக்கு நல்லமுறையில் சேவை செய்யப்பட்டு வருகின்றது.

## மலேரியா மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள்:

இந்நகராட்சியின் 27 வார்டுகளை 6 குழுக்களாக பிரித்து தினந்தோறும் (லார்வா புழு) கொசு ஒழிப்பு மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் 6 மலேரியா மஸ்தூர், மலேரியா மற்றும் டெங்கு காய்ச்சல் Source பணிக்கு எடுக்கப்பட்டு உள்ளது. மேலும் DBC பணியாளர்கள் 47 பேர் வீடுவீடாக சென்று டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

4 கைதெளிப்பான் மற்றும் லாரி மூலம் புகை தெளிப்பான் இயந்திரம் மூலமாகவும் முதிர்ந்த கொசுக்களை ஒழிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## பிராணிகள் இனப்பெருக்க தடுப்பு முறை திட்டம்:

2019-2020-ஆம் ஆண்டில் தெருநாய்களுக்கு இனப்பெருக்க கருத்தடை ஆபரேசன் ஏதும் செய்யவில்லை.

## ஈமச்சடங்கு உதவித் தொகை வழங்கிய விபரம்

இந்நகராட்சி பகுதியில் வசித்து வரும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 2019-2020-ம் ஆண்டிற்கு மானியத் தொகை ஏதும் பெறப்படவில்லை.

## ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டம்

2019-20ஆம் ஆண்டிற்கு ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டத்தின் கீழ் தொகை ஏதும் பெறப்படவில்லை.

## தணிக்கைத் தடைகள்:-

| | | |
|---|---|---|
| 1. ஆரம்பத்தில் உள்ள தணிக்கைத் தடைகள் | : | 112 |
| நிவர்த்தி செய்யப்பட்டது | : | 107 |
| நிலுவையில் உள்ளது | : | 5 |

## வழக்குகள்:

இவ்வருடம் தொடரப்பட்டதும் முடிக்கப்பட்டதுமான வழக்குகள் விபரம் :-

| | | |
|---|---|---|
| 1. வருட ஆரம்பத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள் | : | 9 |
| 2. நடப்பு ஆண்டில் தொடரப்பட்டவை | : | 22 |
| 3. முடிக்கப்பெற்றவை | : | 11 |
| 4. ஆண்டு இறுதியில் நிலுவையிலுள்ள வழக்குகள் | : | 20 |

நிலுவையில் உள்ள வழக்கினை முடிவுக்குக் கொண்டுவர துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அறிக்கை ஆண்டில் நகராட்சி நிதி நிலைமை சீராக இருக்கின்றது.

# பொது

## தேர்த்திருவிழாக்கள்:

இந்நகராட்சி எல்லையில் எந்தவிதமான தேர்த்திருவிழாக்களும் நடத்தப்படுவதில்லை. ஆனால் நகராட்சி அருகில் உள்ள பண்ணாரி தேவஸ்தானத்தில் ஆண்டுதோறும் மார்ச் மாதம் பண்ணாரி மாரியம்மன் தேர்த்திருவிழா நடைபெறுகிறது. சத்தியமங்கலம் நகராட்சி பகுதியில் தேவையான தங்கும் வசதிகள் உள்ளதால் வெளியூரில் இருந்து மேற்படி திருவிழாவிற்கு வரும் மக்கள் சத்தியமங்கலத்தில் தங்கி செல்வதால் சத்தியமங்கலம் நகராட்சி தேவையான வழிநடை ஏற்பாடுகள் சுகாதார வசதிகள் செய்யப்படுகின்றன.

## மரம் நடுதலும் பூங்காக்களும் :

நடப்பு ஆண்டில் 1300 மரக் கன்றுகள் நடப்பட்டன.

## பூங்காக்கள்

நகராட்சியில் மொத்தம் 40 பூங்காக்கள் உள்ளன. இதில் ஒரு பூங்கா மட்டும் பராமரிப்பு பணிகள் செய்யப்பட்டு வருகிறது. மேலும் 39 பூங்கா இடத்தினை சுற்றி ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் கம்பிவேலி அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

## பூங்காக்கள்

## பரிசல்துறை:

நகராட்சியில் ஒரு ஓடத்துறை பராமரிக்கப்படுகிறது. ஓடப்போக்குவரத்து வருமானம் ஏதும் ஈட்டப்படுவதில்லை.

## பொது நூலகங்கள்:

ஈரோடு மாவட்ட நூலக ஆணைக்குழுவால் ஒரு நூலகம் இந்நகரின் மையப் பகுதியில் நடந்து வருகிறது.

# கல்வி

# ஆரம்பக் கல்வி

## கல்வி வசதிகள்:

இந்நகராட்சி எல்லைக்குள் 7 ஆரம்ப பள்ளிகள் உள்ளது. இதில் இந்நகர் மன்றம் மூன்று தொடக்கப் பள்ளிகளையும், ஒரு நடுநிலைப் பள்ளியினையும் ஒரு உயர்நிலைபள்ளியினையும் நிர்வகித்து வருகிறது. அரசு உத்திரவின்படி தற்போது கல்வி பணியாளர்கள் அனைவரும் 1.4.90 முதல் உதவிக் கல்வி அலுவலர் சத்தியமங்கலம் அவர்கள் நிர்வாகத்தின் கீழ் மாற்றம் செய்யப்பட்டனர். நடுநிலைப்பள்ளி உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டுள்ளது.

## ஆரம்பக் கல்வி கணக்கு :

அறிக்கை ஆண்டில் நிதி நிலைமை கீழ்வருமாறு:-

| | |
|---|---|
| ஆரம்ப இருப்பு | ரூ. 75,80,699/- |
| வரவு | ரூ. 51,41,625/- |
| மொத்தம் | ரூ.1,27,22,324/- |
| செலவு | ரூ. 82,93,113.97/- |
| இறுதி இருப்பு | ரூ. 44,29,210.03/- |

சொத்து வரியிலிருந்து **ரூ.51,41,625** கல்வி வரியாக வசூலிக்கப்பட்டுள்ளது.

## நகராட்சி பள்ளி சத்துணவு மையங்கள்

நகராட்சி துவக்கப்பள்ளியிலும் முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் அமுலில் இருந்து வருகிறது.

31.3.2020-ம் தேதியன்று நகராட்சிதுவக்கப்பள்ளியில் உணவு அருந்த நிர்ணயம் செய்யப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை.

| | |
|---|---|
| நகராட்சி உயர்நிலைப்பள்ளி, சத்தியமங்கலம்-2. | 523 |
| நகராட்சி நடு நிலைப்பள்ளி, சத்தியமங்கலம்-1. | 300 |
| நகராட்சி துவக்கப்பள்ளி ,கொளத்தூர்சத்தியமங்கலம்-1. | 26 |
| நகராட்சி துவக்கப்பள்ளிஆர்.எம்.பி. நகர் சத்தியமங்கலம்-2. | 49 |

**ஓய்வூதியம்:**

ஓய்வூதியத்திற்காக வருடம் ரூ.2,06,63,513/- செலவு செய்யப்படுகிறது. சென்ற ஆண்டில் இத்தலைப்பின் கீழ் ரூ.1,76,22,346/- செலவு செய்யப்பட்டுள்ளது.

## பொது

## பொது வருவாய் மற்றும் செலவின விபரம்

2018-2019 சத்தியமங்கலம் நகராட்சியில் வரப்பெற்ற வரவு மற்றும் செலவு விபரங்கள் கீழ்க்கண்டவாறு.

| வ.எண். | வரவு& செலவு | ரூ. ஆயிரத்தில் |
|---|---|---|
| 1 | சொத்துவரி மற்றும் இதர வரி வருவாய் | 22005.77 |
| 2 | மற்ற வரிகள் மூலம் | ---- |
| 3 | ஒதுக்கப்பட்ட வருவாய் | 753.43 |
| 4 | மாநில நிதிக்குழு வருவாய் | 51193.79 |
| 5 | சேவைக் கட்டணம் | 24678.89 |
| 6 | மான்யம் மற்றும் பங்குத் தொகை | 11301.26 |
| 7 | விற்பனை மற்றும் வாடகை | 825.10 |
| 8 | இதர வருமானம் | 2281.04 |
| | **மொத்த வருமானம்** | **113039.28** |
| 1 | பணியாளர்கள் செலவு | |
| | அ) ஊதியம் | 67230.13 |
| | ஆ) மற்றவை | --- |
| 2 | ஓய்வூதிய பயன்கள் | 20663.51 |
| 3 | இயக்கச் செலவுகள் | 17338.89 |
| 4 | பழுது மற்றும் பராமரிப்பு செலவுகள் | 16005.14 |
| 5 | திட்ட செலவு | --- |
| 6 | நிர்வாக செலவுகள் | 2357.46 |
| 7 | நிதி செலவு | 58.00 |
| | **மொத்த செலவினம்** | **123653.13** |

## வருட தொடக்கத்தில் கொடுக்கப்படவேண்டிய கடன்

இவ்வருடத்தில் கடன் ஏதும் பெறப்படவில்லை. திருப்பி செலுத்தப்பட வேண்டிய இவ்வாண்டு அசல் தொகை ரூ.1,38,465/- நிலுவையாக உள்ளது.

## பொது

இந்நகராட்சி நிர்வாகம் செவ்வனே நடைபெறவும் குறைகளை பெரிதுபடுத்தாமல் பொதுமக்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பை கொடுத்து வருவதற்கும் நகராட்சியின் நன்றியை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும் நகர் தூய்மையாகவும் நிர்வாகம் நல்ல முறையில் நடைபெற தங்களை முழுமையாக நகராட்சிப் பணியில் ஈடுபத்திக் கொண்டு பணிபுரியும் பொறியாளர்கள், பொதுப்பணி மேற்பார்வையாளர், பொறியற்பிரிவை சார்ந்த அனைத்து பணியாளர்கள், பொதுசுகாதார பிரிவை சார்ந்த துப்புரவு அலுவலர், துப்புரவு ஆய்வாளர், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், அனைத்து துப்புரவுப் பணியாளர்கள், பொது நிர்வாகத்தை சார்ந்த மேலாளர், நகரமைப்பு ஆய்வர், வருவாய் ஆய்வர், உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், வருவாய் உதவியாளர்கள், அலுவலக உதவியாளர்கள் மற்றும் இதர பணியாளர்கள் அனைவருக்கும் நன்றியையும் நகராட்சியின் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி

**30.04.2020-ஆம் தேதியன்று சத்தியமங்கலம் நகராட்சியில் நடைபெற்ற தனி அலுவலரின் கூட்டத் தீர்மானம் எண்.356-ன் உண்மை நகல் .**

**பொருள் : -**

சத்தியமங்கலம் நகராட்சியின் 2019-2020-ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண் : 356 நாள் 30.04.2020**
**தீர்மானம்** : அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(ஒம்) இரா. அமுதா,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை**

| | |
|---|---|
| அனுப்புநர்<br>திருமதி.இரா.அமுதா,B.Sc.,B.Ed.,<br>ஆணையாளர்,<br>சத்தியமங்கலம் நகராட்சி,<br>சத்தியமங்கலம். | பெறுநர்<br>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,<br>5 ஜே.ஜி நகர் முதல் தெரு,<br>குமரானந்தபுரம்,<br>திருப்பூர்-2 |

ந.க.எண். 1243/2018/சி1 நாள். 24.07.2020

அய்யா,

பொருள்: நிர்வாக அறிக்கை சத்தியமங்கலம் நகராட்சி 2019-20-ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை- அனுப்புதல் தொடர்பாக.

-----

சத்தியமங்கலம் நகராட்சியின் 2019-20ஆம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை இரண்டு நகல்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. மேற்படி நிர்வாக அறிக்கையை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்து மேலனுப்ப பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

இணைப்பு : நிர்வாக அறிக்கை இரு பிரதிகளில்.

நகல் பணிந்தனுப்பப்படுகிறது.
மாவட்ட ஆட்சித் தலைவர், ஈரோடு